செய்தி வெளியீடு எண்.108 நாள்.13.2.2009

## மானிய விலை மளிகைப் பொருட்கள் விற்பனையில் தொய்வு இல்லை
## நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் விளக்கம்

உத்தமர் காந்தியடிகள் பிறந்த தினமான கடந்த அக்டோபர் 2ந் தேதி முதல் மானிய விலையில் மளிகைப் பொருள் என்ற திட்டத்தின் கீழ் மஞ்சள் தூள், மல்லித் தூள், மிளகாய் தூள், கடலைப் பருப்பு, சோம்பு, வெந்தயம், கடுகு, மிளகு, சீரகம், பட்டை, இலவங்கம் ஆகிய பொருட்கள் ரூ.50/– என்ற விலையில் விற்பனை துவங்கப்பட்டது. இதில் பொது மக்களின் நலனைக் கருதி பட்டை இலவங்கத்திற்கு பதிலாக கரம் மசாலாவும், சோம்பிற்கு பதிலாக வெள்ளை உளுத்தம் பருப்பும் சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தரமான பொருட்களாகவே தமிழகத்தில் பெயர் பெற்ற சக்தி மசாலா, ஆச்சி மசாலா, ஆதித்தியா மசாலா போன்ற நிறுவனங்களிலிருந்தும் தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டு தமிழகத்திலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 1.26 கோடி பொட்டலங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி இத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதைாரர்கள் தங்களது தேவைகேற்ப தனித்தனி பொட்டலங்களாகவும் மானிய விலையில் பெற்றிட ஏதுவாக மஞ்சள் தூள் 50 கிராம் பாக்கெட் ரூ.2/–, மிளகாய் தூள் 250 கிராம் பாக்கெட் ரூ.14/–, மல்லித் தூள் 250 கிராம் ரூ.18/–, கடலைப்பருப்பு 75 கிராம் ரூ.2/–, வெந்தயம் 25 கிராம் ரூ.1/–, கடுகு 25 கிராம் ரூ.1/–, சோம்பு 25 கிராம் / உளுத்தம் பருப்பு 50 கிராம் ரூ.1.50, மிளகு 25 கிராம் ரூ.3/–, பட்டை இலவங்கம் / கரம் மசாலா 10 கிராம் ரூ.2/–, சீரகம் 50 கிராம் ரூ.5.50 என்ற மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு பொதுமக்களின் தேவை மற்றும் வசதிக்கேற்ப பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன. பொருட்கள் அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் அனுப்பப்பட்டு இருப்பு இருந்தாலும், இவை முறையாக மக்களுக்கு தெரியும்படி கடைகளில் வைக்கப்படுவதில்லை என்றும், தனித்தனிப் பொட்டலங்களாக விற்பனை செய்வதில்லை என்றும், புகார்கள் வந்ததால் இது குறித்து தீவிர கள ஆய்வும், நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பொருட்களை மக்கள் வாங்கி பயன்படுத்த விரும்புகின்றனர். மாதம் சராசரியாக 30 இலட்சம் பாக்கெட்டுகள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுகிறது . இதில் எந்த தொய்வும் ஏற்படவில்லை.

தமிழ் புத்தாண்டு தினமான பொங்கல் தினத்தன்று அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பொங்கலிட்டு தமிழர் திருநாளை கொண்டாட ஏதுவாக பொங்கலுக்கு தேவையான பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை மற்றும் ஏலக்காய் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. எந்த தரப்பினருக்கும் இல்லை என்ற நிலை எழாதவாறு போதுமான தரமான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டன. இந்த திட்டத்தின் கீழ் ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். இது போன்ற திட்டங்களை நிறைவேற்றும்போது 100 சதவீத அட்டைதாரர்களுக்கும் வழங்க உத்தரவிட்டதால் விநியோகம் 100 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும்போது சில பொருட்கள் மிச்சப்படுவது தவிர்க்க இயலாது. விநியோகம் செய்யப்படாத 8 சதவீதப் பொருட்களை அமுதம் அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.